# ஜனாதிபதித் தேர்தல்
# 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்வரும் 19-ம் திகதி முஸ்லிம் மக்களுக்கு மிகவும் முக்கியமான ஒரு தினமாகும். சர்வ அதிகாரங்களையும் கொண்ட நாட்டின் ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்யும் அதி முக்கியத்துவம் வாய்ந்த இந்நாளில் கடந்த 11 வருடங்களுக்கு மேற்பட்ட ஐ.தே.கட்சி ஆட்சியில் முஸ்லிம்கள் அநுபவித்த கஷ்ட நஷ்டங்களையும் இன்னல்களையும் கருத்தில் கொள்ளல் அவசியமாகும்.

நாட்டில் சட்டம், ஒழுங்கு, சாந்தி, சமாதானம் என்பன முற்று முழுதாக இல்லாததொன்றாய் விட்டது. கல்வி நிலை பாதிக்கப்பட்டு தொழில்கள் அழிக்கப்பட்டு முஸ்லிம்கள் அல்லல் பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆயிரக்கணக்கானோர் தமது பெற்றோர்களை, பிள்ளைகளை, சகோதரர்களை, கணவன் மார்களை இழந்து அகதி முகாம்களில் தவித்துக் கொண்டிருக்கின்றனர்

முஸ்லிம் அரசியல் வாதிகளும், கல்விமான்களும் திட்டமிட்டு கொலை செய்யப்படுகின்றனர்.

இஸ்ரேலியர்களின் இலங்கை வருகை, வடக்கு, கிழக்கு இணைப்பு போன்றவற்றால் முஸ்லிம்கள் தமது உரிமைகளையும் சலுகைகளையும் இழந்து வருகின்றனர். ஐக்கிய தேசியக்கட்சியின் தீர்க்கதரிசனமற்ற வெளிநாட்டுக் கொள்கைகளே இந்நிலைக்குக் காரணமாகும்.

எதிர்வரும் 19-ம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் பொதுத் தேர்தலை விட முக்கியத்துவம் பெற்றதொன்றாகும். ஆகவே இலங்கை முஸ்லிம்களாகிய நாம் எமதும் எமது எதிர்கால சந்ததியினரதும் தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் இத்தேர்தலில் மிகப் பொறுப்புடன் நடந்து கொள்வது அவசியமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உள்ளடக்கிய ஜனநாயக மக்கள் கூட்டணி தனது தேர்தல் விஞ் ஞாபனத்தில் முஸ்லிம் மக்களுக்கு பல நன்மை களையும் சலுகைகளையும் வழங்க முன் வந்துள்ளது. ஆகவே ஜனநாயக மக்கள் முன்னணியின் பொது அபேட்சகரான திருமதி சிறிமாவோ பண்டாரநாய க்காவுக்கு எமது வாக்குகளை அளித்து எமது எதிர் கால நலன்களை உறுதி செய்து கொள்வோமாக.!

அஸ்ஸலாமு அலைக்கும்

டாக்டர்.எச்.எம். மஃரூப்
உபதலைவர்.
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் முஸ்லீம் பெருமக்களே!

## அஸ்ஸலாமு அலேக்கும்.

பல விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் எமது தாய் நாடாம் இலங்கை தவித்துக் கொண்டிருக்கும் இச் சமயத்தில் எமது நாட்டின் ஜனாதிபதித் தேர்தல் 1988-டிசம்பர் மாதம் 19ம் திகதி நடைபெறவுள்ளது. இத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக அதன் தலைவி உலகத்தின் முதல் பெண் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக தற்போதைய பிரதமரான திரு.ஆர்.பிரேமதாசாவும், ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஓசி அபேகுணசேகராவும், போட்டியிடுகின்றுர்கள். இத் தேர்தல் இலங்கை முஸ்லீம்களைப் பொறுத்த வரையில் ஒரு முக்கியத்துவம் பெற்றதாய் அமைந்துள்ளது. இத் தேர்தலில் நாம் எடுக்கும் முடிவு எம்மை மாத்திரம் அல்லாது அடுத்து வர இருக்கும் எமது பிற்கால சந்ததியினதும் எதிர் காலத்தை நிர்ணயிக்கக் கூடியதாய் இருக்கும். ஆகவே எதிர்வரும் தேர்தலில் நாம் யாருக்கு எப்படி வாக்களிப்பது என்பதை நல்ல முறையில் சிந்தித்து நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்த்து நியாயமான பொறுப்பான ஒரு முடிவை எடுப்பது எமது தலையாய கடமையாக இருந்து கொண்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் தேர்தலில் முக்கிய இரண்டு போட்டியாளர் களான திருமதி பண்டாரநாயக்கா, திரு பிரேமதாச ஆகிய இருவரில் யார் முஸ்லீம்களது நலனைப் பாது காக்கக் கூடியவர்? யார் மூலம் எமது சமுகத்துக்கு கூடிய சேவையை பெற்றுக் கொள்ளலாம்? என்பதே தற்போது முஸ்லிம்கள் விடைகாண வேண்டிய அதி முக்கிய விடயமாகும். இந்த இருவருமே கிட்டத் தட்ட 12 வருடங்கள் நாட்டின் பிரதமராக செய லாற்றி இருக்கின்றார்கள். ஏறக்குறைய 30 வருடங்கள் அரசியலில் பொறுப்பான பதவிகளில் இருந்த இவ் விருவரது சேவையையும் நாம் மிக ஆழமாக பரீ ட்சித்துப் பார்த்தல் வேண்டும். இருவருள் யார் நாட்டுக்கு கூடிய சேவை செய்துள்ளார்? பல சமூகத் தவரிடையே நியாயமாக நடந்து கொள்வதில் காட்டிய திறமையும் தனித்துவமும் யாரிடம் சிறப் பாக இருந்தன?

பிரச்சினைகட்குத் தீர்வு காணும் திறமை, கூரிய நோக்கு, பக்கஞ்சாராத் தன்மை, பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துப் பொறுப்பேற்கும் திறமை, சர்வதேச அரங்கிலே மேலோங்கி நிற்றல் போன்ற சிறப்பம்சங்களால் இன்று நம் நாடு குறிப்பாக முஸ் லிம்கள் எதிர் நோக்கியுள்ள இக் கட்டான நிலையிலே நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் திறமை யாருக்குண்டு? என்ற சில வினாக்களை நாமே கேட்டு விடை காண்பதன் மூலம் நாம் ஒரு சிறந்த முடிவை எடுக்கலாம்

சட்டச்சீர்குலைவு, அமைதியின்மை ஆகிய இரண் டும் நமது உள்நாட்டு பிரச்சினைகளாகி விட்டன. எமது நாட்டு இறைமை, சுதந்திரம் ஆகிய இரண்டு க்கும் வெளியேயிருந்து அச்சுறுத்தல் ஏற்பட்டு ள்ளது. அரசாங்கத்தின் பரிதாபகரமான சீர்கெட்ட ஆட்சியே இந்த உள்நாட்டு வெளிநாட்டு அச்சுறுத் தல்கட்குக் காரணமாகும். ஆகவே அரசாங்கத்தில் பிரதமர் பதவி வகிக்கும் திரு பிரேமதாஸாவும், ஜனாதிபதியும் நாட்டின் தற்போதைய பயங்கர நிலை க்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி நேரத்தில் இன்றுள்ள நிலைமைக்குத் தான் பொறுப்பு இல்லை என்று கூறும் திரு பிரேமதாஸா வின் கூற்று அர்த்த மற்றதல்லவா? அவரின் பொறுப்பற்ற தன்மையை இது காட்டவில்லையா?

1977 தேர்தலின் பின் நடந்த வன்செயல்கட்கு ஆதரவு நல்கியது யார்? அதைத் தொடர்ந்து நாட்டில் பல இனக்கலவரங்கள் ஏற்பட்டு 1983-ம் ஆண்டில் உக்கிர நிலைமையை அடைந்த இனக்கல வரங்களுக்கு பின்னணியில் இருந்து செயல்பட்டவர் யார்? தமிழ் மக்களுக்கு விரோதமான இனக்கல வரம் என்ற பெயரில் திட்டமிட்டு கொழும்பிலும் மற்றும் நூற்றுக் கணக்கான பிற நகரங்களிலும் எரிக்கப்பட்ட முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகள் வீடுகள் தான் எத்தனை ? சிறுபான்மை மக் களுக்கு எதிராக இனக்கலவரங்களினுல்ஏற்பட்ட சொல்லவொண்ணுத் அனர்த்தங்களை கண்டும் கேட் டும் பராமுகமாய் இருந்தவர்களா எமக்கு எதிர் காலத்தில் பாதுகாப்புக் கொடுக்கப் போகி- ன்ருர்கள்?

1977-ம் ஆண்டு தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ் ஞாபனத்தில் தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் தமி ழர்களது பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காணப்படும் •

உறுதியளித்திருந்தும் ஆட்சிக்கு வந்து பல வருடங் களாகியும் இப்பிரச்சினையைத் தீர்க்க உறுதியான நடவடிக்கை எடுக்காமையும் "தர்மிஷ்ட" என்ற பெயரில் தீர்க்கதரிசனமற்ற முறையில் வேறு பல நடவடிக்கைகளை மேற் கொண்டதுமே நாட்டின் தற்போதைய நிலைக்கு காரணமாகும். சட்டமும் ஒழுங்கும் சமாதானமும் எல்லா மக்களுக்கும் தேவை. இவை இந்நாட்டில் இல்லாமையால் எல்லா இன மக்களும் இடர்படுகின்றனர். ஆனுல் வியாபாரத்தையும் விவசாயத்தையும் முக்கிய தொழிலாகக் கொண்டுள்ள முஸ்லீம்கள் இதனுல் பெரிதும் பாதிக்கப்பட்டு தமது சீவியத்தையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளித்த வாக்குறிதிப்படி தமிழர்களது பிரச்சினைகளுக்கு நியாயமான முடிவு காண ஜனாதிபதி J.R.ஜயவர்தன பற்பல சந்தர்ப்பங்களில் மகா நாடுகள் கூட்டி ஆலோசனை நடத்திய போதிலும் அம்முடிவுகளை நடைமுறைப்படுத்த விடாமல் இனவாதம் பேசி பெரும்பான்மை மக்களைத் தூண்டி தடை செய்வதற்கு காரணமாக இருந்தவர்கள் யார் என்பது நாம் சொல்லாமலே விளங்கக் கூடிய தொன்றாகும்.

இந் நாட்டில் வாழும் முஸ்லீம்கள் எப்பொழுதும் நாட்டுக்கு விசுவாசமாக நடந்துள்ளார்கள். எந்த சந்தர்ப்பத்திலும் நாட்டின் பெரும்பான்மை அரசாங்கத்திற்கும் விரோதமாக ஆயுதமேந்தி போராட்டம் நடத்தவோ அல்லது நாட்டின் ஒரு பகுதியை தமக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடவோ இல்லை. இவர்கள் எப்பொழுதுமே பெரும்பான்மை மக்களோடு அந்நியோன்னியமான முறையில் சமாதானமாக வாழவே விரும்புகின்றார்கள். அப்படிப்பட்ட எமது முஸ்லீம் சமுதாயம் ஐ.தே.க. ஆட்சியில் கடந்த 11 வருடங்களில் சொல்லொன்னாத துயரங்களுக்கு ஆளாக்கப்பட்டார்கள். வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழும் ஆயிரக் கணக்காண முஸ்லீம் சகோதரர்கள் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டும் ஆயிரக்கணக்கான தாய்மார்களும் இளம் சகோதரிகளும் ஈவிரக்கமின்றி மானபங்கப்படுத்தப்பட்டும் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்டவர்களது வீடு வாசல் கடைகள் சொத்து சுதந்திரகங்கள் அழிக்கப்பட்டும் அகதிகளாக இலங்கையின் பல்வேறு பகுதிகளில் அகதி முகாம்களில் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் 1000 வருடங்களுக்கு மேல் இலங்கை திருநாட்டை தாயகமாக கொண்டு வாழும் முஸ்லீம்கள் சுதந்திரத்துக்குமுன் அந்நிய ஆட்சியாளர்களின் ஆட்சியின் கீழோ அல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1948ம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்த பின் ஆட்சி செய்த அரசாங்கங்களின் கீழோ என்றுமே இந்த விதமான துன்பங்களுக்கோ துயரங்களுக்கோ ஆளாக்கப்படவில்லை.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் பல முஸ்லீம் தலைவர்கள் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர். மூதூர் உப அரசாங்க அதிபரும் ஜாமிஆ நளீமியாவின் இஸ்லாமிய அறிஞருமான மௌலவி அஷ் ஷெய்க் ஹபீபு முஹம்மது சுப ஹூத் தொழுகைக்கு பள்ளிக்குச் செல்லும் வழியில் கொலை செய்யப்பட்டார். இலங்கையின் ஒரே-யொரு முஸ்லீம் அரசாங்க அதிபரான ஜனுப் மக்பூல் மன்னாரில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் சமயம் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். மேலும் ஒரு உப அரசாங்க அதிபரான ஜனுப் இப்ராஹீம் கொலை செய்யப் பட்டார். ஓர் பிரதி அமைச்சராக இருந்த கின்னிய-மூதூர் மக்களின் கௌரவத்தலைவர் ஜனுப் ஏ.எல். அப்துல் மஜீட் அவர்களின் உயிர் அநியாயமாக அபகரிக்கப்-பட்டது. முன்னுல் பட்டின சபைத்தலைவரும் காத்தான்குடிப் பள்ளி வாசல்களின் சபைத் தலைவரு-மான அல் ஹாஜ் அஹமது லெப்பை பள்ளி வாசலில் இருந்து வீடு திரும்பும் வழியில் சுட்டுக் கொல்லப்பட்டார். வடக்கு கிழக்கு முஸ்லீம் மக்களை பல வழிகளிலும் தயாள சிந்தையுடன் வழி நடத்தி வந்த பல முஸ்லீம் தனவந்தவர்கள் திட்ட-மிட்டு கொலை செய்யப்பட்டும் கொள்ளையடிக்-கப்பட்டும் அப்பகுதி வாழ் முஸ்லீம்கள் ஆதர வற்ற அநாதைகளாக தவிக்க விடப் பட்டு-ள்ளார்கள். இப்படியாக எமது தலைவர்களும் கல்வி மான்களும், தனவந்தர்களும் அழித்தொழிக்கப்படும் போது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது.? பிரதமர் பிரேமதாஸா தான் என்ன நடவடிக்கை எடுத்தார்? இப்படியாக எமது சமயத் தலைவர்களை நிர்வாக அரசியல் தலைவர்களை அழித்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிக்கும் செயல் தட்டிக் கேட்பாரின்றிக் கட்ட வீழ்க்கப்பட்டுள்ளது. நாட்டின் பிரதமரான திரு பிரேமதாஸா கட்டடத்தையும் சமாதானத்தையும் நிலை நாட்டவும் சமூகங்களுக்கிடையே நல்லெண்ணத்தை வளர்க்கவும் ஏதும் செய்துள்ளாரா? ஆகவே அவரது கடந்த 12 வருட கால சேவைகளை எடைபோட்டு எதிர்காலத்தில் திரு பிரேமதாஸா முஸ்லீம் மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு செயல்ப்பட்டக்கூடியவரா எனறு தீர்மாணிக்க வேண்டியது முஸ்லீம்களின் கடமையாகும்.

எமது நாட்டின் சுதந்திரம், சுயாட்சி இரண்டும் ஒரு புறம் இலங்கை இந்திய உடன்படிக்கை யாலும் மறுபுறம் இஸ்ரவேலரின் வருகையாலும் அச்சுறுத்தப் படுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் வெளிநாட்டுக் கொள்கை, முக்கியமாக இலங்கை இந்திய உடன்படிக்கை பொதுவாக இந்நாட்டுக்கும் குறிப்பாக முஸ்லீம்களுக்கும் பாதகமாகவே அமைந்துள்ளது. மேற்கு நாட்டு சார்புடையதாகயிருந்து வந்த ஐ.தே.க.யின் வெளிநாட்டுக் கொள்கை இந்தியாவின் நலன்களுக்கு அச்சுறுத்தலாக அமையுமோ என்ற சந்தேகம் இந்தியாவிற்கு ஏற்பட்டது. இதனல் தனது செல்வாக்கின் கீழ் இலங்கையை கொண்டு வர இந்தியா சில நடவடிக்கைகளை எடுத்தது. அவற்றின் விளைவுதான் இலங்கை இந்திய உடன்படிக்கை. திரு பிரேமதாஸா இந்தியாவுக்கும் அந்நாட்டின் பிரதமருக்கும் எதிரான சுலோகங்களைப் பகிரங்க மேடைகளில் இருந்து எழுப்பினர். இவ்வாறு இந்தியாவில் இந்தியர் இடையே இலங்கையருக்கெதிரான கிளர்ச்சியைத் தூண்டி விட்டார். இந்த கண்மூடித்தனமான செய்கை காரணமாகவே இலங்கை இந்திய உடன்படிக்கையை இந்தியா இலங்கை மீது திணித்தது. 1977ல் தேர்தல் பிரசாரத்தின் போது இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கும் அவரது மகனுக்கும் எதிராக திரு பிரேமதாசா அருவருக்கத்தக்க வார்த்தைகளைப் பாவித்தார். அதன்பின் பதவிக்கு வந்த இந்தியப் பிரதமர் மொரார்ஜிதேசாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையைத் தொடர்ந்து திரு பிரேமதாசா ஆற்றிய உரை இராஜ தந்திர முறைகளுக்கு முரண்பட்டாதாக இருந்தது. 1983ம் ஆண்டுக்கும் பின் இந்தியாவுக் கெதிராக பல சந்தர்ப்பங்களில் பகிரங்க மேடைகளிலிருந்து அவர்விட்ட சவால்கள் இவரின் இராஜ தந்திர அறியாமையை வெளிப்படுத்திற்று. இந்த உதாரணங்களிலிருந்து திரு. பிரேமதாசா தேசத் தலைவராக யிருந்து எமது வெளிநாட்டு கொள்கைகளைச் சரிவர வழிநடத்த தகுதி பெற்றவரா என்பதை அரசியல் அரிச்சுவடி படிக்காத வரும் தீர்மானிக்கக் கூடிய தொன்றுகும்.கடந்த காலங்களைப் போலன்றி இன்றைய உலகில் ஒரு நாட்டின் வெளியுறவு சீரான முறையில் வழி நடத்தப்படாவிட்டால் பல அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்ற உண்மையை அண்மைக்கால சம்பவங்களில் இருந்து விளங்கிக் கொள்ளக் கூடியதாய் இருக்கின்றது.

இந்திய இலங்கை உடன்படிக்கை மக்களின் எதிர்ப்பை தூண்டி விட்டது. தான் பதவிக்கு வந்ததும் இந்த உடன்படிக்கையை இரத்துச் செய்வேன் என்று திரு. பிரேமதாஸா கூறுகின்றார். இவரது இக் கூற்று ஐக்கிய தேசியக் கட்சி அண்மையில் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு முரண்பட்டதாகும். உடன்படிக்கையில் கைத்சாத்திட்ட ஐ.தே.க அரசாங்கத்தின் பிரதமரல்லவா இந்த பிரேமதாசா அவர்கள்? இந்த நகல் சட்டத்தை பாராளுமன்றத்தில் பிரேரித்து அதற்கு ஆதரவாக பேசியவரல்லவா இந்தப் பிரேமதாசா? இவர் உண்மையிலேயே இந்த உடன்படிக்கையை எதிர்ப்பவராயிருந்தால் திரு. காமினி ஜயசூரிய செய்தது போல் தனது பிரதமர் பதவியை இராஜிஞமாச் செய்து தனது எதிர்ப்பைக் காட்டாமல் இன்று பகிரங்க மேடைகளில் இருந்து எதிர்ப்பைக் காட்டி வருவதன் மூலம் தான் ஒரு சந்தர்ப்பவாதி என்பதை காட்டுகின்றார் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே சமயத்தில் திருமதி சிறிமா பண்டார நாயக்கா அவர்கள் இந்திய இலங்கை உடன்படிக்கைக்கும் இந்நாட்டில் இந்திய படைகள் இருப்பதற்கும் ஆரம்பத்திலிருந்தே தனது எதிர்ப்பைக் காட்டி வருகின்ருர். தான் பதவிக்கு வந்ததும் இந்த உடன் படிக்கையை இரத்துச் செய்வதாகவும் இந்திய படையை எமது மண்ணிலிருந்து வெளியேற்றுவதாகவும் அவர் பகிரங்கமாகக் கூறிவருகின்ருர், அவர் தனது வாக்குறுதியை அமுல் படுத்தக் கூடிய சாதுரியம் உடையவர் என்பதை அவரது 12 வருட கால அரசியல் வெளிநாட்டுக் கொள்கை யில் இருந்து தெளிவாகும். 1970ம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் இந்த நாட்டிலிருந்து முஸ்லீம்களின் எதிரிகளான இஸ்ரவேலர்களே வெளியேற்றுவதாக சிறிமா அம்மையார் வாக்குறுதி அளித்து இருந்தார். மே மாதத்தில் வெற்றி பெற்ற அவர் செப்டம்பர் மாத முடிவுக்குள்ளேயே இஸ்ரவேலிய தூதரகத்தை மூடி இஸ்ரவேலர்களே இந்நாட்டை விட்டு வெளியேற்றி தேர்தல் முஸ்லீம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினுர். இவரது இச்செய்கை தான் தேர்தல் காலங்களில் கொடுக்கும் வாக்குறுதிகளே நிறைவேற்றக் கூடிய திறமை படைத்தவர் என்பதை நிரூபிக்கின்றன.

1971 இல் பாகிஸ்தானே இரு கூருக பிரிக்கும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே யுத்தம் நிகழ்ந்தது. அப்போதைய பாகிஸ்தானிய பிரதமர் ஸுல்ப்பிகார் அலி பூட்டோ வின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தியாவை பகைத்துக் கொள்ளாது பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருந்து தனது புத்திக் கூர்மையையும் அரசியல் சாதுரியத்தையும் நிலை நாட்டியுள்ளார் அணிசேரா இயக்கத்திலே இலங்கைக்கு ஒரு தனி இடம் இருப்பதற்கு அவரே காரணமாக இருந்தார் 1963ல் இந்தியாவுக்கும் சீனுவுக்குமிடையிலான சில பிணக்குகளால் யுத்தமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூண்டுவிடக் கூடிய நிலே தோன்றியது அன்று அணி சேரா நாடுகளின் வேண்டுகோளுக்கிணங்க இந்தோனீசிய வெளிநாட்டு அமைச்சர் கலாநிதி சுபாந்திரோ உட்பட்ட தூதுக் குழுவுககு தலைமை தாங்கி சீனு சென்ருர் எகித்திய பிரதமர் அலி சப்ரி அவர்களையும் கொண்ட சமாதானத்தூதுதுக் குழுவொன்றுக்கு தலைமை தாங்கி இந்தியாவுக்குச் சென்ருர். சிரிமாவோ அம்மையாரின் இச்சமாதான முயற்சியால் இந்தியாவுக்கும் சீனுவுக்கும் இடையில் நடைபெறயிருந்த யுத்தம் தவிர்க்கப்பட்டது இவ்யுத்தம் நடைபெற்று இருந் தால் எமது நாடு பெரிதும் பாதித்திருக்கும். அவர் இந்தியாவுடன் செய்த இரண்டு ஒப்பந்தங்களே இலங்கை மக்கள் என்றுமே மறக்க முடியாது ஏறக்குறைய பத்து இலட்சம் நாடற்ற இந்தியா வம்சாவளியினர் பற்றிய சிறிமா சாஸ்திரி ஒப்பந்தமே இதில் ஒன்று இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளுக்குமிடையில்ஏற்பட்ட பெரும் கொந்தளிப்பு தணிக்கப்பட்டது. **1974** இல் திருமதி இந்திரா காந்தியுடன செய்து கொண்ட கச் சதீவு பற்றிய உடன்படிக்கை மிக முக்கியம் வாய்ந்தது. ஏனெனில் ஒரு யுத்தமாக வெடிக்கக் கூடிய பிரச்சினையாக கச்சதீவு உரிமைப் பிரச்சினே இருந்து வந்தது. இவ்விரு ஒப்பந்தங்களேயும் தனது இராஜ தந்திர சாதுரியத்தால் இலங்கைக்கு சாதகமாக அமைத்துக் கொண்டார்

இலங்கை இந்திய உடன்படிக்கையை இரத்துச் செய்வதில் இந்தியாவுடன் சாதுரியமாகப் பேச்சுவார்த்தை நடத்தக் கூடிய ஒருவர் இருப்பார் என்ருல் அவர் திருமதி பண்டார நாயக்காவே தான் அவர் அவ்வாறு செய்வதன் மூலம் எம் நாட்டின் முக்கிய பிச்சினே ஒன்று தீர்க்கப்படுகின்றது. ஆனல் **1987** ஜுலே உடன்படிக்கையால் கிழக்கு வாழ் முஸ்லீம் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் **35%** க்கு மேற்பட்ட முஸ்லீம்கள், இலங்கை -இந்திய ஒப்பந்தத்தால் வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்ட மாகாணத்தில் **16%**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைக்கப்பட்டுள்ளனர் இதனுல் முஸ்லீம்காள் தமது அரசியல் செல்வாக்கையும், மற்றைய உரிமை களையும் இழந்துள்ளரர். பல நூறு வருடங்களாக அனுபவித்து வரும் உரிமைகளே எக்காரணம் கொண்டும் இழக்க முஸ்லீம்கள்தயாராக இல்லே. ஆகவே தான் இந்த உடன்படிக்கை ரத்துச் செய்ய ப்படவேண்டுமென்று பெரும்பான்மை சிங்களவர் களுடன் சேர்ந்து முஸ்லீம்களும் விடுக்கும் கோரி க்கையை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஏற்று இவ் வுடன்படிக்கையை ரத்துச் செய்வதாக வாக்குறுதி அளித்துள்ளது.

1977ம் ஆண்டு தேர்தலின் பின் மிகப் பெரும் பான்மைப் பலத்தோடு ஆட்சிக்கு வந்தது ஐ.தே. கட்சி. இலங்கை முழுவதிலும் உள்ள முஸ்லீம் மக் களில் ஏறத்தாழ 90% வீதமானேர் ஐ.தே.கட்சிக்கு வாக்களித்து அதன் வெற்றியை உறுதி செய்தனர். முஸ்லீம் மக்களின் இது போன்ற ஏகோபித்து ஆதர வுக்கு ஐ.தே.கட்சி செய்த பிரதி உபகாரம் என்ன? முஸ்லீம் மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட இஸ்ரவேல ர்களே (புனித திருக்குர்ஆனில் அல்லாஹ்ற வால் சபிக்கப்பட்ட எஹூதிகளே ) மீண்டும் இலங்கைக்கு கொண்டு வர தீர்மானித்தனர். ஐ.தே.கட்சியின் இத்தீர்மானத்தை அனைத்து முஸ்லீம் மக்களும் கட்சி பேதமின்றி எதிர்ப்பு ஆர்ப் பாட்டங்கள், ஊர்வலங் கள் மூலமும் வேறு பல வகைகளிலும் தமது கடு மையான எதிர்ப்பை தெரிவித்தனர். ஐ.தே.கட் சியின் சிரேஷ்ட முஸ்லீம் தலைவர் டாக்டர் M.C.M கலீல் உட்பட மற்றும் பலரும் ஐ.தே.கட்சியின் இம் முடிவுக்கு முஸ்லீம் மாநாடு கூட்டி வன்மையாக எதிர்ப்பை தெரிவித்த போது திரு. பிரேமதாச பிரதமராயிருக்கும் ஐ.தே.கட்சியின் தலைவர் ஜனுதி பதி ஜயவர்தன "இஸ்ரவேலியர்களே இலங்கைக்கு கொண்டு வரும் கட்சியின் முடிவில் எந்தவித மாற் றமும் செய்ய முடியாது. இதை விரும்பாத முஸ் லீம்கள் யாரும் இருப்பின் அவர்கள் கட்சியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டும் வெளியேறலாம்" என்று பகிரங்கமாக உரைத்தார். இது உண்மையிலேயே தனிப்பட்ட ஒருவருக்கு சொன்ன விஷயமல்ல 90% ஐ.தே.கட்சிக்கு வாக்களித்த முஸ்லீம் சமுதாயத்தையே அவமானப்படுத்தும் வகையில் சொன்னதாகும். முஸ்லீம் மக்களாகிய நாம் இச்சமயத்தில் ஒரு விசயத்தை பதித்து கொள்வது அவசியம். அதாவது "முஸ்லம் மக்களின் நலனுக்காகவே அரசியல் கட்சிகளன்றி கட்சிகளின் நலனுக்காக முஸ்லீம் மக்கள் அல்ல என்பது

இப்படியாக முஸ்லீம்களின் ஏகோபித்த கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது இலங்கைக்கு கொண்டு வரப் பட்ட இஸ்ரேலிய "மொஸாட்" நாட்டின் பல பகுதிகளிலும் முஸ்லீம்களுக்கு ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள் எத்தனை? எத்தனை? வடக்கு கிழக்கில் தனிநாட்டுப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் புலிப்படையினரை அடக்கி யொடுக்கி முறியடிக்க கொண்டுவரப்பட்ட இஸ்ரேலிய மொஸாட் படையினரால் அரசாங்கத்தின் எதிர்பார்ப்பில் நூற்றுக்கு ஒரு வீதமாவது நிறைவேற்றப்பட்டு விட்டதா? நிச்சயமாக இல்லவே இல்லை. அதற்குப் பகரமாக உலக முஸ்லீம் சமுதாயத்தையே முறியடிக்கத திட்டமிட்டுள்ள இஸ்ரேலியர்களின் திட்ட மிட்ட சதிச் செயல்கள் காரணமாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ்-முஸ்லீம் மக்களிடையேயும் இலங்கையின் மற்றைய பகுதிகளில் பெரும்பான்மை சிங்கள மக்களோடும் இனக் கலவரங்களைத் தூண்டி முஸ்லீம் மக்களை இலங்கை நாட்டில் இருந்து அழித்தொழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

இலங்கை முஸ்லீம்கட்கு இஸ்ரேலிய சியோனிஸ்களால் ஏற்பட்டுள்ள கஷ்டங்களை இங்கு விரிவாக விளக்க முடியாதெனினும் ஒரு சில முக்கிய சம்பவங்களை மட்டுமாவது குறிப்பிடுவது நல்லது..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை மூதூர் அக்கரைப்பற்று பகுதிகளில் நடந்த கலவரங்களை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

1. கல்முனைக்குடியில் முஸ்லிம்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நடந்த மோதல்.

11 மன்னார் நகரில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 250க்கு மேற்பட்ட கடைகள் இஸ்ரேலிய மொஸாட் பிரிவினரால் பயிற்றப்பட்ட கொமாண்டர்களால் எரிக்கப்பட்டமை.

111. கொழும்பு கொம்பனித் தெருவில் முஸ்லிங்களை இலங்கைப் புடையினர் தாக்கியமை.

IV.1987 பெப்ரவரியில் கிரான்பாஸ் பொலிசார் முஸ்லிம்களை தாக்கியமை.

V.காத்தான் குடியில் முஸ்லிம்-தமிழர் இனக்கலவரம்

VI.அக்கரைப்பற்றிலும் மூதூரிலும் கல்முனையிலும் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரங்கள்.

VII.யாழ்ப்பாண சோனகத் தெருவில் வாழ்ந்த முஸ்லிம்கள் துடி துடிக்க கொடூரமாக கொலை செய்யப்பட்டு அடக்கம் செய்யப்படாமல் பாதையோரங்களில் அழுகிப் போன பிணங்கள்.

VIII.மன்னார் பிரதேசத்தில் இடம் பெற்ற முஸ்லிம்- தமிழர் இனக்கலவரத்தால ஏற்பட்ட அனர்த்தங்கள் என்று அடுக்கிக் கொண்டே போகலாம்

இது மாத்திரமன்றி பல நூற்றுண்டு காலங்கள் ஒற்றுமையாகவும் அன்னியோன்னியமாகவும் வாழ்ந்து வந்த வடமேற்கு மாகாண முஸ்லிம்களும் பெரும்பான்மை சிங்கள சகோதரர்களுடன் இனக்கலவரங்களில் ஈடுபட வேண்டி ஏற்பட்டன. அவற்றில் ஒரு சிலவற்றையும் ஞாபகப்படுத்திக் கொள்வது பொருத்தமென நினைக்கின்றோம்.

1. பண்டுவஸ்நுவரத் தொகுதியில் கொட்டாம்பிட்டிய, அசனக் கொட்டுவ எஹத்தமுல்ல என்ற முஸ்லிம் கிராமங்களில் இடம் பெற்ற முஸ்லிம்-சிங்கள இனக்கலவரங்கள்.

2. பிங்கிரியத்தொகுதியில் கினியம, வீதியாவல் ஆகிய கிராமங்களில் நடந்த கலவரங்கள்.

3. எலபடகமயிலும், தம்பதெனியாவிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வருடம் மே மாதத்தில் சிலாபத்திலும் நடந்த இனக்கலவரங்கள் உட்பட இன்னும் எண்ணிலடங்கா சிங்கள-முஸ்லிம் இனக்கலவரங்கள் இலங்கை முஸ்லிம் சரித்திரத்திலேயே காணமுடியாத வகையில் இஸ்ரேலிய மொஸாட் பிரிவினரின் இலங்கை வருகையின் பின் இலங்கையின் ஏனைய மாகாணங்களிலும் இடம் பெற்றன. இவை அத்தனைக்கும் திரு பிரேமதாஸவின் ஐ.தே.கட்சி என்ன பதில் சொல்லப் போகின்றது? குறைந்த பட்சம் பாராளுமன்றத்தில் இவைகளைக் கண்டித்து ஓர் அறிக்கையாவது விட்டாரா முஸ்லிம்களின் வாக்குகளை வேண்டி நிற்கும் திரு பிரேமதாஸா? இந்த இனக்கலவரங்களை இட்டு விசாரணைகள் நடாத்தப்படாதது ஏன்?

கல்விப்பகுதியில் வெளியிடப்பட்ட முஸ்லிம் பாலர்களுக்கான நாலாந்தரப் பாடப்புத்தகத்திலே ஒரு முறை நபியவர்களின் கற்பனைப்படம் பிரசுரிக்கப்பட்டதை அடுத்து பல பகுதிகளிலுமிருந்து இச்செய்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் அது தவறுதலாக நடந்த செயல் என்று பாடப்புத்தகங்கள் வாபஸ் செய்யப்பட்டன அதைத் தொடர்ந்து சில மாதங்களுக்கிடையில் மறுமுறை வெளியிடப்பட்ட அதே பாடப்புத்தகத்திலும் மேலும் ஒரு கற்பனைப் படம் வெளியாயிற்று.

பொறுப்பு வாய்ந்த முஸ்லிம் அமைச்சர்கள் இருந்தும் பாடப்புத்தகம் வெளியிடப்படமுன் பார்வையிடப் பொறுப்பு வாய்ந்தவர்களான முஸ்லிம் அதிகாரிகள் இருந்தும் இது நடந்தது. இது வேண்டுமென்றே முஸ்லிம் மக்களின் மனதை புண்படச் செய்த வேலை அல்லவா? இம்மாதிரியான இந்நிகழ்ச்சிகளுக்குப் பின்னணியில் இருந்து செயல்படுபவர்கள் சியோனிஸ யூதர்களே அன்றி வேறில்லை. இப்பாடப்புத்தகத்தில் ஏற்பட்ட பிழை எப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் நடந்தது என்று விசாரணையாவது நடத்தப் படாதது ஏன் என்பதற்கு பிரதமர் பிரேமதாஸ பதில் சொல்லியாக வேண்டும். இது விசாரணை நடந்திருப்பின் அவ்விசாரணையின் முடிவை வெளியிடப்படாதது ஏன்?

தற்போது இலங்கையில் ஒரு புதிய தேர்தல் முறையை ஐ.தே.கட்சினர் பராளுமன்றத்தில் தமது பெரும்பான்மையைப் பாவித்து அறிமுகம் செய்துள்ளனர். 1931ல் இலங்கை மக்களுக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது முதல் பாராளுமன்றத்தில் முஸ்லிம்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும் என்ற கோஷத்தையே முஸ்லிம் தலைவர்கள் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பியுள்ளார்கள் என்பது 1931ல் இருந்து ஹன்சார்ட் வெளியீடுகளில் இருந்து தெளிவாகின்றது.1931ல் டொனமூர் அரசியலமைப்பின் பின் நியமிக்கப்பட்ட எல்லாக் குழுவினரும் முஸ்லிம்கழுக்கு 8% தொகுதிகள் கிடைக்கக் கூடிய சிபார்சுகளையே முன் வைத்தனர். ஆனால்

புகுத்தப்பட்டுள்ள விகிதாசார வாக்கு முறையினால் முஸ்லீம்கட்கு தற்போதுள்ள பிரதிநிதித்துவத்தில் அரைப்பங்காவது கிடைக்குமா என்பது சந்தேகமே இந்தப் புதிய முறை இஸ்ரவேலில் இருந்து எமது நாட்டுக்கு அறிமுகம் செய்யப்பட்டதொன்றாகும் என்று இப்புதிய சட்டத்தை பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்திய போது கூறினார், இஸ்ரவேலிய பல்கலைகழகத்தில் இரண்டு வருடங்கள் விரிவுரையாளராக முன்பு கடமையாற்றிய அமைச்சர் லலித் அத்துலத்முதலி. உலகத்திலுள்ள நாடுகளில் இத் தேர்தல் முறை அமுலில் இருக்கும் ஒரே நாடு இஸ்ரவேல் ஆகும். பாராளுமன்றத்தில் முஸ்லீம்களுக்கு தற்போது இருக்கும் பிரதிநிதித்துவத்துக்கு சாவு மணி அடிக்கத்தான் சியோனிஸ்களின் ஆலோசனையின் கீழ் இந்தப் பிரதிநிதித்துவ முறை புகுத்தப்பட்டுள்ளதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த பல தேர்தல்களிலும் முஸ்லீம்கள் பெரும் பான்மையாக ஐ.தே.கட்சிக்கே வாக்களித்து வந் துள்ள போதும் பண்டாரநாயக்க அரசாங்கங்கள் முஸ்லீம்கள் விஷயத்தில் மிகவும் நியாயமான முறையில் நடந்துள்ளது. அவ்வரசாங்கங்கள் தமது கருமங்களை நிறை வேற்றுகையில் முஸ்லீம்களுக்கு அவர்களுக்குரிய பங்கை சரியாக வழங்கி வந்து ள்ளது. இது சம்பந்தமான சில உதாரணங்களை இங்கு தருவது பொருத்தமாக அமையும்.

1955ம் ஆண்டு ஐ.தே.கட்சியின் கல்வி அமை ச்சர் திரு. எம்.டி. பண்டாவால் மூடப்பட்ட முஸ்லீம் பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையை 1956ல் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்க அர சாங்கம் உடனடியாக திறந்து முஸ்லீம் பெண்களின் கல்விக்கு உயிரூட்டியது.

இலங்கையின் பல பகுதிகளிலும் இருந்த மத்ர ஸாக்கல் பதிவு செய்யப்பட்டு உதவிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

முதன் முதலாக அல்-ஆலிம் பரீட்சை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

சோனக இஸ்லாமிய கலாச்சார நிலையத்துக்கு ஒரு நன்கொடையை வழங்கி புனித திருக்குர்ஆனை சிங்களத்தில் மொழி பெயர்க்கும் பணியை ஆரம் பித்து வைத்தது.

வானொலியில் முதன்முதலாக முஸ்லீம் நிகழ் ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டது.

50% மேல் முஸ்லீம் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகளை முஸ்லீம் பாடசாலைகள் என பெய ரிட்டு அவைகளுக்கு முஸ்லீம் அதிபர்கள் நியமிக் கப்பட்டனர்

G.C.E.படித்த ஆண் பெண்கட்கு ஆசிரிய பதவிகளை வழங்கி முஸ்லீம் பாடசாலைகளில் இருந்த ஆசிரியர் பற்றுக்குறையை நீக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சில் முஸ்லீம்களின் நலனைக் கவனிக்க மூன்று அதிகாரிகள் மட்டும் இருந்ததை 1961ல் மேலும் பத்து முஸ்லீம் கல்வி அதிகாரிகளை நியமித்து முஸ்லீம் கல்வி நலனைக் கவனிக்க வழி செய்யப்பட்டது.

கல்வி அமைச்சில் முஸ்லீம்களுக்கென ஒரு தனிப்பிரிவு உண்டாக்கி முஸ்லீம் கல்வி வளர்ச்சிக்கு உதவியுள்ளது.

இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள முஸ்லீம் பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வு கூடங்கள் நிறுவப்பட்டன.

கிராமப்புற பாடசாலைகளிலும் உயர்தர வகுப்புகள் ஆரம்பிக்க ஏதுவாக பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு முஸ்லீம் உயர் கல்விக்கு வித்திடப்பட்டது. எம்சமூகத்தில் இன்று காணப்படும் பெரும்பாலான டாக்டர்களும், என்ஜினியர்களும், பட்டதாரிகளும் பண்டார நாயக்க அரசாங்கங்கள் வளர்த்த கிராமப்புர பாடசாலைகளில் இருந்து வந்தவர்களே.

இப்போது ஐ.தே.கட்சி அரசு எமது உயிர் நாடியான கல்வி வளர்ச்சிக்கு என்ன செய்தது என்பதைப் பார்ப்போம்.

1977ல் ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம் கல்வி அமைச்சில் முஸ்லீம் நலனைக் கவனிக்கவென அமைத்திருந்த முஸ்லீம் பிரிவுக்கு மூடு விழா நடாத்தியது.

பல முஸ்லீம் கல்வி அதிகாரிகள் தான்தோன்றித்தனமாக அங்குமிங்கும் இடமாற்றஞ் செய்யப்பட்டு சமூகத்துக்கு எந்த ஒரு வேலையையும் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

மௌலவி ஆசிரியர் நியமனங்கள் நிறுத்தப்பட்டன

G.C.E. (O/L)பரீட்சைக்கு ஒரு பாடமாக இருந்து வந்த அரபு மொழி அப் பரீட்சையில் இருந்து நீக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கிலும் கிழக்கிலும் ஈழநாடு கோரி போரா ளிகள் நடத்தி வரும் போராட்டத்தின் காரணமாக அங்குள்ள மக்கள் ஆயிரமாயிரமாக வெளியிடங் களுக்கு குடிபெயர்ந்து கொண்டிருந்த சமயத்தில் தமிழ், சிங்கள, ஆங்கில ஆகிய மொழிகளில் சிங்கள மொழி உட்பட எம் மொழியிலும் கற்று பல்கலை க்கழகத்துக்கு தேறிய இலங்கையின் எல்லாப் பகுதி அனைத்து முஸ்லிம் மாணவர்களையும் ஆண், பெண் வித்தியாசமின்றி வடக்கிலும் கிழக்கிலுமுள்ள பல்கலை கழகங்களுக்கு மட்டுமே செல்லுமாறு நிர்பந்திக்கப்பட்டனர். அப்படி அங்கு சென்ற சிலர் கொல்லப்பட்டும் வேறு பலர் இன்னோரன்ன கஷ்ட ங்களுக்கு ஆளாகியும் கூட அவர்களது வேறு பல் கலைக்கழக வளாகங்களில் தமக்கு இடம் தருமாறு விட்ட கோரிக்கையை முற்று முழுதாக நிராகரி த்தது. கஷ்டங்களுக்கு மத்தியிலும் யாழ்ப்பான பல்கலைக்கலகத்தில்

வைத்தியத் துறையில் பட்டம் பெற்ற மாணவர் களுக்கு உயர்கல்விக்கான(F.R.C.S)பட்டம் பெற முடியாது. இதனால் முற்றிலும் பாதிப்பு முஸ்லிம் மாணவர்கள் அல்லவா? இதற்கு ஐக்கிய தே.கட்சி அரசாங்கமே காரணம். இதனால் எத்தனையோ முஸ்லிம் மாணவர்கள் தமது உயர்கல்வியைக் கைவிட்டார்கள்.

அரபு, இஸ்லாம், இஸ்லாமிய நாகரீகம் ஆகிய மூன்று பாடங்கள் உட்பட நான்கு பாடங்களைக் கற்று பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பு பெற்றி ருந்த முஸ்லிம் மாணவர்கட்கு மேற்படி மூன்று பாடங்களை இரண்டு பாடங்களாகக் குறைத்து முஸ் லிம்கள் பல்கலைகழகம் செல்லும் வாய்ப்பை குறை த்தது ஐ.தே.கட்சி அரசாங்கமே!

திரு பிரேமதாஸா மத்திய கொழும்புத் தொகு தியின் முதல் அங்கத்தவராவார். இலங்கையின் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் ஒன்றான மத்திய கொழும்பு தொகுதியில் அமைந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ள ஹமீத் அல்-ஹுஸைனி மகா வித்தியாலயம் தனது நூற்றாண்டு விழாவை நடாத்தி முஸ்லிம் கல்விக்கு ஒரு புது உணர்வை கொடுக்க ஏற்பாடு செய்தது கொழும்பு மத்திய தொகுதியின் இரண்டாவது அங்கத்தவரும் உதவி அமைச்சருமான அல்ஹாஜ் ஜாபிர் ஏ. காதர் பாடசாலையால் ஏற்பாடு செய்த நூற்றாண்டு விழாவைச் சிறப்பாக நடத்தி அப்பாடசாலைக்கு மேலதிக வசதிகளை செய்து கொடுக்கலாம் என விரும்பி தனது முழு ஆதரவையும் வழங்கினார். ஆனாலும் திரு பிரேமதாசா தலையிட்டு தனது அதிகாரத்தைப் பாவித்து அந்த நூற்றாண்டு விழா நடப்பதை நிறுத்தி விட்டார்.

இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாடு என்ற ஒரு இயக்கம் பெரும்பாலும் ஐ.தே.கட்சி உயர் மட்டத்தோடு தொடர்பு உடைய பிரமுகர்களைக் கொண்டதாகும். இவ்வியக்கம் அண்மைக் காலங்களில் முஸ்லிம் கல்விக்குச் செய்யப்படும் சில அநீதிகளை சுட்டிக் காட்டி அவைகளுக்கு நிவாரணம் காண விரும்பி கல்வி அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்காவைச் நேரில் சந்திக்க ஒரு சந்தர்ப்பம் தருமாறு அவரைக்கேட்டது.

பலமுறை ஞாபகப்படுத்தியும் பல வருடங்களாகியும் இன்னும் தன்னைச் சந்திப்பதற்கு அந்த ஐ.தே.கட்சி சார்புடைய முஸ்லிம் பிரமுகர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கம் முஸ்லிம்களது பல கல்விப் பிரச்சினைகளுக்கு நிவாரணம் வழங்கியது மட்டுமல்லாமல் ஒரு முஸ்லிம் கல்வி அமைச்சரையே நியமித்து முஸ்லிம்களைக் கௌரவித்தது.

தமது சமயத்தை உயிரிலும் மேலாக மதிப்பவர்கள் முஸ்லீம்கள் சமயத்தை அணுவாகக் கடைபிடிக்க நாம் தவறுவதில்லை. சந்தர்ப்பத்துக்கு அமைய அதில் மாற்றஞ் செய்து கொள்வது எமது வழக்கம் அல்ல. எமது ஷரீஅத் சட்டம், குர்ஆன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹதீஸ் ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டதாகும். அது இலங்கைச் சட்டத்திலும் முஸ்லிம்களின் சொந்தச் சட்டமாக இடம் பெற்றுள்ளது. எமக்கு சொந்தமான இச் ஷரீஅத் சட்டத்தை மாற்றவோ மாற்றங் கொண்டு வருமாறு கேட்கவோ யாருக்கும் உரிமை கிடையாது. அப்படிப்பட்ட எமது ஷரீஅத் சட்டத்தை மாற்ற ஒரு முயற்சி எடுத்தது ஐ.தே.கட்சி அரசாங்கம். இதனைச் செவியுற்ற முஸ்லிம்கள் கொதித்தெழுந்து பள்ளிவாசல்கள் மூலமாகவும் இஸ்லாமிய சமய சங்கங்கள் மூலமாகவும் கல்விமான்களும், மார்க்க அறிஞர்களும் தனிப்பட்ட முறையிலும் தமது கடும் எதிர்ப்பைக் காட்டியும் கூட இவைகளை அலட்சியம் செய்து தமது முயற்சியை தொடர முற்பட்டது இவ்வரசாங்கம். திருமதி சிரிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் சுதந்திரக்கட்சியின் மத்திய குழு தனது எதிர்ப்பை அரசாங்கத்துக்கு தெரிவித்ததை அடுத்து ஷரீஅத் சட்டம் மாற்றக் குழுவின் நடவடிக்கைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டன

இஸ்லாம் வெறுக்கும் சூதாட்டத்தை இந்த அரசாங்கம் ஒரு தேசிய அந்தஸ்துக்கு உயர்த்தி நாடளாவிய ரீதியில் மாத வருமானம் பெறும் ஊழியர்களையும் பாடசாலை மாணவர்களையும் தவறான வழியில் இட்டுச் சென்று கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக முஸ்லிம்கள் மாத்திரம் அல்லாமல் மற்றைய மதத்தோடும் தமது கலை கலாச்சாரம் ஆகியவைகளுக்கு விரோதமாகச் சென்று படு பாதாளத்தில் விழுந்து கொண்டிருக்கின்றன. இந்த தேசிய அந்தஸ்து பெற்ற சூதாட்டங்களுக்கு முன்னோடியாக இருப்பவர்கள்தான் இன்றைய அரசின் ஜனாதிபதி J.R ஜயவர்தனவும், ஜனாதிபதித் தேர்தலில் உங்கள் வாக்குகளைக் கேட்கும் திரு பிரேமதாஸாவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு நகர எல்லைக்குள் வாழும் மக்களுள் 25% வீதமானோர் முஸ்லீம்கள் மத்திய கொழும்பில் வாழும் முஸ்லீம்களுள் 75% வீதமானோர் சேரிகளில் வாழ்கின்றார்கள் ஆகவே வீட்டுப்பிரச்சினையே கொழும்பு வாழ் முஸ்லீம்களின் மிகப் பெரிய பிரச்சினையாகும் திரு பிரேமதாஸாதான் மத்திய கொழும்பின் பாராளுமன்ற பிரதிநிதியாகவும் வீடமைப்புக்குப் பொறுப்பான அமைச்சராகவும் பிரதம அமைச்சராகவும் கடந்த 12 வருடங்கள் இருந்து வருகின்றார் அப்படியானால் கொழும்பு முஸ்லீம்களது வீட்டுப் பிரச்சினையை தீர்த்து வைக்க ஆக்கபூர்வமாக ஏதும் நடவடிக்கை எடுத்துள்ளாரா இந்த "மக்கள் சேவகன்" திரு பிரேமதாஸ என தன்னை அழைத்துக் கொண்டும் தமது சக கட்சி பாராளுமன்ற அங்கத்தவரான அல்ஹாஜ் ஜாபிர்.ஏ. காதர் அவர்களுக்கு தொகுதி ரீதியாக கொடுக்க வேண்டிய வீட்டுப் பங்கைத்தானும் கொடுக்கவில்லை என்பது கொழும்பு முஸ்லீம்கள் நன்கு அறிந்து இருக்கின்றனர். பத்து இலட்சம் வீடுகளை அமைத்து விட்டதாக தம்பட்டம் அடிக்கும் பிரதமர் பிரேமதாஸ மூன்று பிரதிநிதிகளைக் கொண்ட கொழும்பு மத்திய தொகுதிக்கு மாத்திரம் 20,000 வீடுகள் கிடைத்திருக்க வேண்டும். இந்த 20,000 வீடுகலிலும் 36% வாழும் முஸ்லீம்களுக்கு 7000 வீடுகள் கிடைத்திருந்தால் சேரிகளில் வாழும் முஸ்லிம் மக்கள் தொடர்ந்தும் சேரிகளில் வாழ வேண்டிய அவசியம் இல்லையே ? ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் வாக்குகளைக் கேட்கும் திரு பிரேமதாஸ இதற்கு என்ன பதில் சொல்லப் போகின்றார்?

பத்து இலட்சப் வீடுகள் கட்டப் பட்டிருந்தால் இலங்கையில் 8% முஸ்லிம்களுக்கு 80,000 வீடுகள் கொடுக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால் 8,000 தானும் கொடுக்கப் பட வில்லையே ? பிதமரின் கிராம எழுச்சித்திட்டத்தின் கீழ் 562 உதாகம என்ற கிராமங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றனவாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியானால் 8% முஸ்லீம்களுக்கு 45 உதாகம கிராமங்கள் கிடைத்திருக்க வேண்டும் ஒரு உதாகம கிராமமாவது முஸ்லீம்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளதா? இல்லவே இல்லை அப்படியானால் முஸ்லீம்களுக்கு சேர வேண்டிய பங்கை தனது அமைச்சின் மூலமே பெற்றுக் கொடுக்க முடியாத திரு பிரேமதாஸாவுக்கு எப்படி முஸ்லீம்கள் தங்களது விலை மதிக்க முடியாத வாக்குகளைக் கொடுக்க முடியும்?

வடக்கு, கிழக்கு பகுதிகளில் நிலவும் இனப்பிரச்சினை சம்பந்தமாக பல பேச்சுவார்த்தைகள் பல இடங்களில் நடைபெற்ற போதிலும் கிழக்கு இலங்கையில் வாழும் 35% முஸ்லீம்களின் நலனைக் கவனித்துக் கொள்ளவோ அல்லது பிரதிநிதித்துவப் படவோ சந்தர்ப்பம் கொடுக்காத ஐ.தே.கட்சி அரசாங்கம் முஸ்லிம் மக்கள் மீது கொண்டுள்ள அக்கறையைப் பறைசாட்டுகிறது. தீர்க்க தரிசன மற்ற கொள்கைகள் காரணமாக இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் போன அரசாங்கம் கிழக்கு இலங்கை முஸ்லீம்களை பலியிட்டு வட கிழக்கு இணைப்பை பிரகடனப்படுத்தியுள்ளது.

முஸ்லிம் விவகாரங்களுக்கு பொறுப்பான ஒரு முஸ்லிம் அமைச்சர் இருந்தும் முஸ்லிம்கள் பலியிடப்பட்டிருப்பதும் வெளி விவகாரங்களுக்கு பொறுப்பான ஒரு முஸ்லிம் அமைச்சர் இருந்தும் 1970-ல் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட முஸ்லீம்களின் பரம எதிரிகளான இஸ்ரேலியர்களை திரும்பவும் எமது நாட்டுக்கு கொண்டு வரப்பட்டிருப்பதும் வருந்தத்தக்கதும் கண்டனத்துக்குரியதுமான செயல்களாகும். கடந்த 12 வருடங்களில் முஸ்லீம்களுக்கு ஏற்பட்டஎண்ணிற்ற அனர்த்தங்களை கண்டும் கேட்டும் தமது சகோதர முஸ்லீம்கள் சார்பாக ஒரு கண்டனச் செய்தியை கூட பாராளுமன்றத்தில் தெரிவிக்காது தமது பட்டம் பதவிகளைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் அமைச்சர்களையும் பாராளுமன்ற அங்கத்தவர்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் மக்கள் என்றுமே மன்னிக்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

1970-1977க்கு இடைப்பட்ட கால சிரிமாவோ அம்மையாருடைய ஆட்சியில் இரண்டு சிங் கள-முஸ்லிம் இனக்கலவரங்கள் ஏற்பட்ட போதி லும் அதை 48 மணித்தியாலத்தில் முடிவுக்கு கொண்டு வந்து முஸ்லீம்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது.

திருமதி பண்டாரநாயக்கா எல்லாச் சமூகத் தவருக்கும் சமமான சேவையை விரும்புகின்றார் நாட்டில் சட்டமும் அமைதியும் வேண்டுமென அவர் விரும்புகிறார். முஸ்லீம்களுக்கு பாதகமான இலங்கை - இந்திய உடன்படிக்கையை இரத்துச் செய்து இந்திய அமைதி காக்கும் படையினரை நாட்டை விட்டு திருப்பி அனுப்புவதாகப் பிரகடன ப்படுத்தி இருக்கின்றார். முஸ்லீம் மக்களின் விருப்பத்துக்கு விரோதமாக கொண்டு வரப்பட் டுள்ள இஸ்ரவேலர்களை இலங்கை மண்ணிலிருந்து வெளியேற்றுவதாகப் பகிரங்க அறிக்கை விடுத் துள்ளார். கடந்த காலங்களில் முஸ்லீம் சமூகத்துக்கு பயன் தரக்கூடிய பல பணிகளை பண்டாரநாயக

அசாங்கங்கள் செய்துள்ளன. அதற்குப் பகரமாக திரு பிரேமதாஸ பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.தே.கட்சி முஸ்லீம்களுக்கு குறிப்பாக முஸ்லீம் கல்வி வளர்ச்சிக்கு பல இடையூறுகளை செய்துள்ள தோடு முஸ்லீம்களின் நன்மைக்கும் விருப்புக்கும் புறம்பான பல செயல்களை நாம் மேலே எடுத்துக் கூறியுள்ள உண்மைகளிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்

இலங்கையில் என்றுமில்லாதவாறு முஸ்லீம்கள் இன்று ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் வெறுப் புற்று சுதந்திரக்கட்சியை ஆதரிக்க முன்வந்து ள்ளனர். 90% வீதம் முஸ்லீம் மக்கள் வாக்களித்தும் எம்மை உதைத்துத் தள்ளியது ஐ.தே.கட்சி. குறைந்த பட்சம் வாக்குகளை அளித்தும் எமக்குப் பல சலுகை களையும் உரிமைகளையும் பெற்றுக் கொடுத்தது சுதந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரக்கட்சி, கடந்த 30 வருடங்களாக ஐ.தே.கட்சியை ஆதரித்த முஸ்லீம் மக்களில் 90% வீதத்துக்கு மேற்பட்டோர் சுதந்திரக்கட்சிக்கு கொடுக்கும் ஆதரவு முஸ்லீம் மக்களிடையே ஏற்பட்டுள்ள பெரும் மாற்றத்தை பிரதிபலிக்கின்றது. ஐ.தே.கட்சியையும் சுதந்திரக் கட்சியையும் ஒப்பிட்டு பார்க்கும் அதே சமயத்தில் தனிப்பட்ட முறையிலும் திரு பிரேமதாசா கடந்த காலங்களில் முஸ்லீம்கள் பால் எப்படி நடந்துள்ளார். திருமதி பண்டாரநாயகா முஸ்லீம் விடயங்களில் கடந்த காலங்களில் எந்த முறையில் நடந்துள்ளார் என்பதையும் கருத்தில் கொள்ளல் வேண்டும்

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் ஐ.தே.கட்சியின் மீது அடைந்துள்ள வெறுப்பபை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. 19-11-1988-ல் நடந்து முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள். கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களில் 1977-ல் நடந்த பொதுத் தேர்தல், 1982-ல் நடந்த ஜனுதிபதித் தேர்தல் 1988-11-19-ம்திகதி நடைபெற்ற மாகாண சபைத்தேர்தல்களில் ஐ.தே.கட்சி பெற்ற வாக்குகளின் புள்ளிவிபரங்களை உங்கள் கவனத்துக்குச் சமர்ப்பிக்கின்ருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மட்டக்களப்பு மாவட்டம் | 1977 | 1982 | 1988.11.19. |
|---|---|---|---|
| கல்குடா | 13,140 | 15,950 | 194 |
| மட்டக்களப்பு | 25,345 | 24,220 | 476 |
| பட்டிருப்பு | 5189 | 7129 | 86 |
| தபால் வாக்கு | | 795 | |
| மொத்தம் | 43,674 | 48,094 | 756 |
| அம்பாறை மாவட்டம் | | | |
| அம்பாறை | 24,581 | 29,049 | 5338 |
| சம்மன்துறை | 13,642 | 19,079 | 147 |
| கல்முனே | 12636 | 18,347 | 111 |
| பொத்துவில் | 30,315 | 23,286 | 1704 |
| தபால் வாக்கு | | 1011 | |
| மொத்தம் | 81,174 | 90,772 | 7300 |
| திருகோணமலே மாவட்டம் | | | |
| சேருவெல | 14,926 | 15,823 | |
| திருகோணமலே | 11,823 | 14,503 | |
| மூதூர் | 12,520 | 14,529 | |
| தபால் வாக்கு | | 667 | |
| மொத்தம் | 39,279 | 45,522 | |

திருமலே மாவட்டத்தில் 1977ல் 39,279 வாக்குகளேயும் 1982ல் 45,522 வாக்குகளேயும் பெற்ற ஐ.தே.கட்சிக்கு 1988-11-19ல் நடந்து முடிந்த மா.ச. தேர்தலுக்கு அபேட்சகர்கள் பட்டியலொன்றை தயாரித்து நியமனப்பத்திரம் கையளித்து போட்டியிட முடியாத நிலேக்கு தள்ளப்பட்னர். இந்நாட்டில் முஸ்லீம்கள் பெரும்பான்மை இனமாக வாழும் ஒரே மாவட்டமான அம்பாறை மாவட்டத்தில் ஒரு அமைச்சரும் ஒரு பிரதி அமைச்சரும் இரண்டு பிரதி அமைச்சர்களுமாக நான்கு தொகுதிகளேயும் ஐந்து ஆளும். ஐ.தே.கட்சியினர் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். 1977-1982 தேர்தல்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையே 81,174 வாக்குகளையும் 90,772 வாக்குகளையும் பெற்றிருந்த ஐ.தே.கட்சி 19-11-88ல் நடந்த மா.ச.தேர்தலில் மொத்தமாக பெற்ற வாக்குகள் 7300 மட்டுமே

கல்முனையில் 03-11-1988-ல் நடந்த ஐ.தே.கட்சி ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் 25,000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் என்று ஜனத்திரள் உள்ள புகைப்படம் ஒன்றையும் போட்டு பத்திரிகைகளில் பிரசுரித்து இருந்தது நாம் யாவரும் அறிந்த உண்மை. அதன் பின்னர் பேர்வளையில் ஒரு ஐ.தே.கட்சி ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் திரு பிரேமதாஸா கல்முனை மக்கள் 25,000 க்கு மேற்பட்டோர் எனக்கு தங்க மாலை யிட்டு வரவேற்றனர் என்று கூறியது யாவரும் அறிந்த உண்மையே நடந்து முடிந்த மா.ச. தேர்தலில் கல்முனை மக்கள் 111 வாக்குகளை மட்டும் கொடுத்து திரு பிரேமதாஸா அப்பட்டமான மெய்யர் என்பதை நிரூபித்து விட்டனர். இதிலிருந்து கூலிப் படைகளாலும், பலாத்காரத்தாலும், பயம் காரண மாகவும் கூட்டங்களில் பங்கு பற்றும் எல்லா மக்களும் தமது வாக்குகளை ஐ.தே.கட்சிக்கு அளிப்பதில்லை என்பதற்கு சான்றாகும்.

அதே நேரத்தில் மூன்று தொகுதிகளில் நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டம் ஐ.தே.கட்சியின் தமிழர்களது தலைமைத்துவத்திற்கு பொறுப்பான உள்நாட்டு விவகார அமைச்சர் திரு. தேவநாயகம் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு ராஜதுரை ஆகிய இரு சிரேஷ்ட அமைச்சர்களோடு மேலும் ஒரு முஸ்லிம் பிரதிநிதி ஜனாப் அஹ்மத் ரிஸ்வி சின்ன லெப்பை ஆகிய மூவரும் இம்மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்

1977, 1982 தேர்தல்களில் முறையே 43674 வாக்குகளையும் 48094 வாக்குகளையும் பெற்ற பிரதமர் திரு பிரேமதாஸாவின் ஐக்கிய தேசியக் கட்சி 19.11.1988-ல் நடந்த மாகாண சபைத் தேர்தலில் 756 வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மேற்படி முடிவுகளில் இருந்து மக்கள் விருப்பத்துக்கு மாருக கிழக்கு மாகாண முஸ்லீம்களை பலிக்கடாக்களாக்கி ஐ.தே.கட்சி செய்த இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு முஸ்லீம்கள் முற்று முழுதான தமது எதிர்ப்பை செய்கை மூலம் காட்டியிருப்பது மட்டுமன்றி பிரதேச தமிழ் மக்களும் பெரும்பான்மை இன சிங்களவரும் தமது பலத்த கண்டணத்தை காட்டியுள்ளனர். இது கிழக்கு மாகாணத்தில் ஐ.தே.கட்சியினர் எவ்வளவு தூரம் தமது செல்வாக்கை இழந்துள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது மட்டுமல்லாமல் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி அபேட்சகர் திரு பிரேமதாசா அடையப் போகும் படு தோல்வியையும் பறைசாற்றுகின்றது.

தற்போது உள்ள சூழ்நிலையில் திருமதி பண்டாரநாயகாவின் வெற்றி உறுதியாகிவிட்டதொன்று. கடந்த 12 வருடங்களில் ஐ.தே.கட்சி எமக்கிழைத்த அநியாயங்களுக்கும் அநீதிகளுக்கும் விடிவு காண சுதந்திரக் கட்சியின் மாபெரும் வெற்றியில் நாமும் பங்கு தாரர்களாகி, இழந்த உரிமைகளை பெற்றுக் கொள்ள முஸ்லீம்கள் அனைவரும் ஒரு கொடியின் கீழ் அணி திரண்டு திருமதி பண்டாரநாயகாவுக்கு வாக்களித்து, எமது எதிர் கால நல் வாழ்வுக்கு வழி வகுத்துக் கொள்வோமாக! அம்மையாரின் வெற்றியே எமது வெற்றி!! அதுவே முஸ்லீம்களின் வெற்றி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org